வலயக்கல்வி காரியாலயம் நுவரெலியா

கோட்டம் III

நிகழ் நிலை வகுப்புக்களுக்கான செயலட்டை 07.07.2021

நு/தங்கக்கலை இல.01 தமிழ் மகா வித்தியாலயம்

திரு.T.A.பெற்றிக் குறே தரம் - 11 சித்திரக்கலை

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. (பின்வரும் பந்தியை பூரணபடுத்துக)

இவர் 1922 இல் மாத்தறை, கம்புறுப்பிட்டிக் கிராமத்தில் 01..... பிறந்தார்.கொழும்பு தொழினுட்பக் கல்லூரியில் கலை பயின்று, இங்கிலாந்து, 02..... ஆகிய நாடுகளிலும் சித்திரக் கலைப் பயிற்சி பெற்றுள்ளார். கல்வித்திணைக்களத்தில் சித்திரக் கலைப் பரிசோதகராகவும், 03 ..... சபையில் சித்திரக் கலைப் பணிப்பாளராகவும் சேவையாற்றினார். சிறுவர் நூல்களுக்காகப் 04..... பாணியில் சித்திரங்களைப் படைத்த ஒருகலைஞராக இவர் சிறப்புப் பெறுகின்றார். 05. ....வர்ணம், நீர் வர்ணம், அக்கிரலிக்கு போன்ற வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் படைத்துள்ளார். இவரது ஆக்கங்கள் இரண்டு வகைப்படும் 06....., 07..... எளிமையான, நவீன வடிவங்களைக் கொண்ட 08.....ஆக்கங்களுக்கான ஆரம்பகால முன்னோடியும் ஆவார். அவர் படைப்பாக்கத்தின்போது எளிய, 09..... நிலையான தளவுருவங்களையும், நிறங்களையும் மிகவும் ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்தியுள்ளார். இவ்வுலகு சாராத எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு, 10..... உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும், நயப்புக்கு வழிகோலும் வகையிலும் இவரது படைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

1942 இல் யாழ்ப்பாணம், அளவெட்டியில் பிறந்த 11..... 1961 இல் யாழ்ப்பாண 12..... கால ஓவியக் கழகத்தில்" அடிப்படை ஓவியக் கல்வி பெற்று, அரச கலைக்கல்லூரியில் ஓவியக் கலையில் உயர்கல்வி பயின்றார். அரச கலைக் கல்லூரியில் வரைதல், ஓவியம் தீட்டல் தொடர்பாக மேலும் பயின்றவர். இவர் ஓவியங்களை மட்டுமன்றி பல சிற்பங்களையும் வடித்துள்ளார். 13..... பாணியுடன் நவீன நுட்ப முறைகளையும் கலந்து தமக்கே உரித்தான பாணியில் அவர் ஆக்கம் படைத்துள்ளார். 14..... எனும் செய்தித்தாளுக்காக முதன் முதலாக விளக்கப்படமொன்றினைப் படைத்தார். பின்னர் பல தமிழ்ச் செய்தித்தாள்களுக்கும் சித்திரங்கள் படைத்துள்ளார்.

15..... 1898 இல் இங்கிலாந்தில் யோக்ஷயர் பிராந்திய காசல் போட் நகரில் பிறந்தார். கிரேக்க – 16..... கலை மற்றும் மறுமலர்ச்சிக் காலத்தில் காணப்பட்ட மரபுரீதியான சிற்பக் கலைப் படைப்புக்களின் பின்னர் புதியதொரு பாணியில் சிற்பக் கலையை உலகுக்கு அறிமுகஞ் செய்த பெருமை கலைஞரைச் சாரும். அதுவரையில் காணப்பட்ட கட்புல யதார்த்தத் தன்மையிலிருந்து வேறுபட்ட 17..... உருவங்களைச் சிற்பக் கலையில் அறிமுகஞ் செய்த கலைஞராவர். அவரது 18..... சிற்பங்கள் இயற்கையான தோற்றம், இயற்கையான பருமன் ஆகிய இயல்புகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றமை தெளிவான ஒரு விடயமாகும். பாரிய உடலைக் கொண்ட மனித உருவங்களில் 19.....தலையைக் காட்டுதல் இவரது படைப்புக்களின் தனிச் சிறப்பாகும். 20....., சாய்ந்து படுத்திருக்கும் பெண் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அவரது சிற்பங்களுள்

www.lkedu.lk

பெரும்பாலானவை 21……வைப்பதற்கான சிற்பங்களாகவே ஆக்கப்பட்டுள்ளன. சிற்பங்களைப் படைப்பதற்காக பயன்படுத்தும் மூலப்பொருள்களை மாற்றிய அவர், பாரம்பரியமாக பயன்படுத்திய கல்லிற்கு பதில் 22……, 23…….. போன்ற பொருள்களை பிரதியீடு செய்து கொண்டார். வெயில், மழை, காற்று போன்றவற்றுக்கும் ஈடுகொடுக்கத் தக்க வகையில் ஊடகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மூலப்பொருள்களை மாத்திரமன்றி, 24…….. கோட்பாடுகள் மற்றும் நுட்பமுறைகளையும் அவர் மாற்றியமைத்தார்.

கலைமதிப்பீடு





25. இனங்கானல் …… 30. இனங்கானல் ……
26. கலைஞர் …… 31. கலைஞர் ……
27. சிற்பப்பாணி …….. 32. சிற்பப்பாணி ……
28. ஒழுங்கமைப்பு …….. 33. ஒழுங்கமைப்பு ……
29. ஊடகம் …….. 34. ஊடகம் ……..



35. கலைஞர் ……
36. ஊடகங்கள் …….
37. வர்ண நுட்பமுறை …….
38. எண்ணக்கரு …….



39. கலைஞர் ……
40. பாணி …….
37. நுட்பமுறை ……
38. எண்ணக்கரு …….

பகுதி 03 – மேலதிக பயிற்சி – குஷன் உறை